பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 28 திங்கட்கிழமை (11-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 106

# புலிகள் பேச்சுக்கு வருவரென எதிர்பார்க்கின்றார் சந்திரிகா'

## ரி. வி. பேட்டியில் அவரே தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அரசு சமர்ப்பித்துள்ள சட்ட ஆவணம் குறித்து பேச்சு நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் முன்வருவார்கள் என்று அரசு எதிர் பார்க்கின்றது.

— இவ்வாறு தொலைக்காட்சி பேட்டியில் தெரிவித்திருக்கின்றார் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

'ஈ. ரி. வி' இரண்டாவது ஒளி அலையில் ஜனாதிபதி யின் பேட்டி நேற்று ஒளிபரப் பானது. அப்பேட்டில் சந்தி ரிகா தெரிவித்த முக்கிய அம் சங்கள் வருமாறு:-

★ மத்திய வங்கி குண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் பாடசாலைகள்

சாவகச்சேரி, மார்ச் 11

ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையான வகுப்புகளும், 1996 ஓகஸ்டில் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக் கான வகுப்புகளும் இன்று வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி பாடசாலைகளில் ஆரம்பமாகும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புக ளும் வடமராட்சி, தென் மராட்சிப் பகுதிகளில் இன்று ஆரம்பமாகும் என எதிர் பார்க்கப்படுகின்ற போதி லும் —

இடம்பெயர்ந்த மக்கள் — குறிப்பாக தென்மராட்சியில் — பாடசாலைக் கட்டடங்க ளில் தங்கியிருப்பதால் அந்தப் பாடசாலைகளில் மேற்படி வகுப்புகளுக்கான போதனை ஆரம்பமாகுமா என்பது நேற் றிரவு வரை சந்தேகமாகவே இருந்தது.

பல பாடசாலைகளில் மேல திக கொட்டகைகள் அமைக் கப்பட்டுள்ள போதிலும் அவற் றில் மாணவர்கள் இருந்து கல்வி கற்பதற்கு தேவையான தளபாட வசதிகளோ கரும் பலகை வசதிகளோ இது வரை செய்து கொடுக்கப்பட வில்லை.

எனவே மாணவர்கள் அக் கொட்டகைகளில் பாய் விரித்து அதில் இருந்து படிக்க வேண்டிய நிலையும் உள்ளது.

இடம்பெயர்ந்த பல பாட சாலைகள் வடமராட்சி, தென்மராட்சி பாடசாலை களுடன் இணைந்து இயங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமத்தில் படைகள் உஷார் நிலையிலாம்!

கொழும்பு, மார்ச் 11

வலிகாமத்தில் படையினர் கைப்பற்றிய பகுதிகளை மீட் பதற்காக புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த லாம் என்று கிடைத்த புல னாய்வுத் தகவல்களை அடுத்து அங்கு படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட் டுள்ளனர்.

மட்டக்களப்பு நாவற்குடா வில் உள்ள பயிற்சி முகாமில் இருந்து வந்த 16 வயதுப் பெண் ஒருவர் கொடுத்த தக வலை அடுத்து இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## டாக்டர்கள் வலிகாமம் செல்ல பாதுகாப்பு இல்லை

வலிகாமத்திற்கு டாக்டர் கள் சென்று பணியாற்று வதற்கு ஏற்ற விதத்தில் அங்கு பாதுகாப்பு இல்லை. டாக் டர்களின் பாதுகாப்புக்கு அரசு உத்தரவாதம் எதனை யும் வழங்கவில்லை.

அதனாலேயே அரசாங்க டாக்டர்கள் வலிகாமத்திற் குச் செல்வதற்கு மறுப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

அரசாங்க வைத்திய அதி காரிகள் சங்கத்தின் பேச்சா ளர் ஒருவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் — இரா ணுவத்தினர் மீட்ட பகுதி களில் — வைத்திய சேவை களை ஆரம்பிப்பதற்கு உகந்த வசதிகள் இதுவரை செய்யப் படவில்லை. தங்குமிட வசதி கள் மற்றும் உள்ளகக் கட்ட மைப்பு வசதிகள் எதுவும் முறயாக செய்யப்படவில்லை —என்றும் அவர் சொன்னார்.

## முல்லையில் தாக்குதல்

ஸ்ரீலங்கா வான்படையின் சுபபசொனிக் கிபிர் விமானம் நேற்றுக் காலை 9.45 மணிய ளவில் முல்லைத்தீவு மாவட் டத்தில் குண்டு வீச்சுத் தாக்கு தலை நடத்தியது. சேத விவ ரங்கள் தெரியவரவில்லை.

## புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஹெலிகள் பறக்க முடியாத நிலையில்!

ஸ்ரீலங்கா விமானப்படை அண்மையில் கொள்வனவு செய்த மூன்று ஹெலிக்கொப் டர்கள் நிலத்திலிருந்து ஓர் அங்குலம் கூட எழ முடியாத நிலையில் கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தில் வெறுமனே தரித்து நிற்கின் றனவாம்.

ஆயுட் காலம் முடிவடைந்த இயந்திரங்கள் இந்த ஹெலிக் கொப்டர்களில் பொருத்தப் பட்டிருப்பதே அவை இயங் காமல் நிறுத்தப்பட்டிருப்ப தற்குக் காரணம் என்று தெரி விக்கப்பட்டது.

கசகஸ்தானிலிருந்து கொள் வனவு செய்யப்பட்ட இந்த ஹெலிகளை வாங்குவதற்கு முன்னர் அதனைப் பரீட்சித் துப் பார்ப்பதற்காக விமானப் படை அதிகாரிகள் குழு ஒன்று அந்த நாட்டுக்குச் சென்றிருந் தது.

இப்போது இந்த ஹெலிகள் இயங்க மறுப்பதால் தமக்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களுக்கு, பிரச்சினையா? என்ன பிரச்சினை? எப்படி எழுந்தது?

### 5 தமிழ்க் கட்சிகளிடம் மல்வத்தை பீடாதிபதி கேள்வி

கொழும்பு, மார்ச் 11

தமிழ் மக்களின் பிரச்சினை என்னவென்பது எமக்கு புதி தாக உள்ளது. இந்தப் பிரச் சினைகள் எப்படி எழுந்தன, ஏன் தோன்றின என்பதும் எமக்கு விளங்கவில்லை.

— இப்படிக் கூறியுள்ளனர் மல்வத்தை பீடாதிபதி ரம்புக்வெல ஸ்ரீ விபஸி தேரர் தலைமையிலான பிக்குகள்.

ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல். எவ், ரெலோ, புளொட், ஈரோஸ் ஆகிய ஐந்து தமிழ்க்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியில் புலிகளையும் பங்காளிகளாக்குவது அவசியம்!

### முன்னாள் அமைச்சர் டிரோன் பேட்டி

கொழும்பு, மார்ச். 11

அரசாங்கம் சமர்ப்பித் துள்ள தீர்வுத் திட்டம், அர சமைப்புச் சீர்திருத்தத்துக் கான ஒருசாதனமாக கருவி யாக இருப்பதற்குப் பதி லாக —

சமாதானத்தை, அமைதி யைக் கொண்டு வருவதற்கு வழிசெய்ய வேண்டுமெனில்—

வடக்கின் தள நிலைமைக் குப் பொறுப்பானவர்கள், சமாதான முயற்சியின் பங் காளிகளாக்கப்பட வேண்டி யது மிகவும் அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் தகவல்துறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எண்ணெய்க் குதங்கள் தகர்ப்பால் 2மாதங்களில் ரூ.270 கோடி நஷ்டம்!

### கப்பல்களுக்கு காலதாமதக் கட்டணம் செலுத்தும் நிலை

கொழும்பு, மார்ச் 11

கொலன்னாவ மற்றும் ஊறு கொடவத்த எண்ணெய்க் குதங்கள் தாக்கி அழிக்கப் பட்டதால் ஸ்ரீலங்காவுக்கு கப் பலில் எடுத்துவரப்படும் எண் ணெயை உடனடியாகக் களஞ்சியப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும்—

இதனால் எண்ணெயை கப்பலிலிருந்து துறைமுகத் துக்குப் பாய்ச்சுவதற்காக கொழும்பில் எண்ணெய்க் கப்பல்கள் நீண்ட காலம் தரித்து நிற்க வேண்டியிருப்ப தாகவும்—

கப்பல்கள் காத்து நிற்ப தால் பலகோடி ரூபாக்களை தாமதக் கட்டணமாக அரசு செலுத்த வேண்டியிருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா வீட்டில் தங்கியிருக்கும் பிரான்ஸ் தம்பதியருடன் அரசாங்கம் ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தம்!

### முறைகேடாகச் செய்யப்பட்டதாம்

கொழும்பு, மார்ச் 11

ஜனாதிபதி சந்திரிகாவின் ''றொஸ்மிட் பிளேஸ்'' இல் லத்தில் தங்கியிருந்து, அங்கு நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் பிரான்ஸ் நாட்டு தம் பதிகளுக்கு கடற்படைக்குத் தேவையான ஆயுத தள பாடங்கள், தாக்குதல் படகு கள் ஆகியவற்றை விநியோ கிப்பதற்கான ஒப்பந்தம், [illegible] கேள்விப்பத்திர முறையை அனுசரிக்காமல் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

இந்த பிரான்ஸ் தம்பதியர் கடற்படைத் தளபதிக்கும் மிகவும் நெருக்கமானவர்கள் என்று கடற்படை வட்டாரங் கள் தெரிவித்தன.

1992ஆம் ஆண்டு 'சிமனோ மரைன்' என்ற நிறுவனத் தின் சார்பாக நான்கு தாக்கு தல் படகுகளை வழங்குவ தற்கான ஒப்பந்தமும் இந் தத் தம்பதிகளுக்கே வழங் கப்பட்டது. ஆனால் ஒரு மாதங்களுக்குள் வழங்கப் பட வேண்டிய இப்படகு சுமார் இரண்டு வருடா

(4 ஆம் பக்கம் பார்

### கொழும்புத் துறைமுகம் ஊடாக

## இந்தோனேஷியாவிலிருந்து விமானம் புலிகளுக்கு கப்பலில் வந்ததாம்!

கொழும்பு, மார்ச் 11

விடுதலைப் புலிகளுக்கென இந்தோனேஷியாவிலிருந்து உதிரிப் பாகங்களாக்கப் பட்டு— கொள்கலன் மூலம்— இலகு ரக விமானம் ஒன்று அனுப்பப்பட்டது எனவும்—

இந்தக் கொள்கலனை எந்த வித சோதனையுமின்றி கொழும்புத் துறைமுகத்தி லிருந்து வெளியே கொண்டு செல்வதற்காக சுங்க அதிகாரி கள் பல லட்ச ரூபாய்களை லஞ்சமாக வாங்கியுள்ளனர் எனவும்—

இது [illegible] பொலிஸார் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

21 இழை — பச்சை நிறம்— 5 இஞ்சி, 21 இழை — பச்சை நிறம் — 7 இஞ்சி புதிய வலைகள் விற்பனைக்குண்டு. துரை, துன்னாலை வடக்கு, பிறேம் நாத் வீதி. (41006)

இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு கம்பளங்கள், கென் வூட் குளிர் சாதனப்பெட்டி, வெதுப்பியுடனான மின் அடுப்பு, நாஷனல் சுழல் மின் விசிறி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீசத்ய சாயி பஜனை நிலையம், நாவலர் மடம், சிவகுமார் வீதி, கரவெட்டி. (40339)

தகரப் பந்தல், இரும்புக் கதிரை, மணவறை, சோடனைச்சாமான்கள் தொடர்பு: ம. பொன்னையா, நாவற்குழி தெற்கு, கைதடி. (கோகிலாக்கண்டி சுடற்கரை) (40928)

### காணி விற்பனைக்கு

தும்பளையில் உள்ள தம்புறுவளைப் பிள்ளையார் கோயிலுக்கும், லூர்து மாதா கோவிலுக்கும் இடையே உள்ள காணி 5½ பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. சச்சிதானந்தம், மூத்த தம்பியார் வளவு, வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (40340)

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பூங்கா ஒன்றிற்கு தேவையான நல்லின வளர்ப்பு மீன்களும், Love Birds (காதல் பறவைகள்) தேவை. உடன் தொடர்புகொள்ளவும்: இல. 105, மே/பா உதயன் கிளை, பருத்தித்துறை. (40142)

### வேப்பெண்ணெய்

எம்மால் வழங்கப்பெறும் வேப்பம் விதையிலிருந்து எண்ணெய் ஆட்டித்தரக் கூடியவர்கள் நேரில் சந்திக்கவும். மில்க்வைற், கண்டி வீதி, மீசாலை. (41005)

### ஸ்கூட்டர் உதிரிகள்

ஸ்கூட்டர் உதிரிகளைப் பெற்றுக் கொள்ளவும், அவற்றைப் பழுது பார்க்கவும். ஷண் மோட்டோஸ், பழைய ஸ்கூட்டர்கள் கொள்வனவும் செய்யப்படும். யாழ் வீதி, கிளிநொச்சி, ஹப்பி துணியகம் அருகில், கிளை: கண்டி வீதி, மீசாலை. (சி-4096)

### சோதிடம்

வெளியூர் ஜெனன ஜாதகக் குறிப்பு கணிக்க பலன் பார்க்க சோதிடர் சிவா, நல்லூர். தொடர்பு: சிவகந்தசாமி ஆச்சாரி, ஸ்ரீமீனாட்சி அம்பாள் ஆலய வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (40998)

---

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

## அறிவித்தல்

இன்று (11-03-1996) நடைபெற இருந்த அவசர கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை 13 - 03 - 1996 முற்பகல் 9-30 மணிக்கு நடைபெறும் என்பதனை அங்கத்துவ நிறுவனங்களுக்கு அறியத்தருகிறோம்.

நிர்வாக அலுவலர்,
அ. சா. நி. இணையம்.

(40933)

---

## தசாக அழைப்பு

அன்புடையீர்,

யுவ வருடம் மாசி மாதம் திங்கட்கிழமை (4-3-96). பின்னிரவு சிவபதமடைந்த எமது தந்தையார்

**சிவஸ்ரீ பரமசாமி ஐயர் சிவஞானசுந்தரக் குருக்கள்**
(அரசடிப்பிள்ளையார் கோவில் ஆதீன குரு, வண்ணார் பண்ணை)

அவர்களின் தசாகம் 13-03-96 புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

நன்றி

இங்ஙனம்:
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்

பிள்ளையார் கோவில்,
சப்பச்சிமாவடி,
சாவகச்சேரி.

(41008)

---


# லிங்கம் பட்டு அகம்

## மலிவு விலையில்

| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| ★ காஞ்சிபுரம் | 2400 | 1700 |
| ★ காஞ்சிபுரம் | 1650 | 1300 |

★ மற்றும் சகல விதமான இந்தியன் சாறிகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்

400/- தொடக்கம் 675/- வரை

இல: 1, நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி.

(சி-2989)


---

## பருத்தித்துறை வணிகர் கழகம்

### இரவு பாதுகாப்பு சேவைக்கு
### பாதுகாவலர் விண்ணப்பம் கோரல்

25 வயது முதல் 40 வயது வரையுள்ளவர்கள், வடமராட்சியில் வசிப்பவர்கள் (இடம் பெயர்ந்தவர்களும்) விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்துடன் கிராமசேவையாளரின் அல்லது எமது வணிக கழக அங்கத்தவர் ஒருவரின் நற்சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

V.S. குமார்,
செயலாளர்,
வணிகர் கழகம்

என்ற முகவரிக்கு 15-03-96 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

(40334) — நிர்வாகம்

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்



பிறப்பு: 04 — 03 — 1931

இறப்பு: 11 — 02 — 1996

### திருமதி பாக்கியம் லூக்காஸ்
(உடுவில்)

அன்னாரின் துயரச் செய்தி கேட்டு இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதலளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை 12 - 03 - 1996 செவ்வாய்கிழமை முற்பகல் 11 - 30 மணிக்கு கச்சாய் புனித செபமாலை மாதா ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியிலும், மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், மகள், மருமகன்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

புனித செபமாலை மாதா கோவிலடி,
கச்சாய் வடக்கு,
கொடிகாமம்.

(40927)

---

## சேவை நலன் பாராட்டு

கூட்டுறவு வங்கியினூடாக தனது வங்கிச் சேவையில் இணைந்த

**உயர்திரு இ. இராசலிங்கம்**

அவர்கள் பல ஆண்டுகள் வங்கி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமை புரிந்து அண்மையில் காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளை உதவி முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுக் கடந்த 06 - 02 - 96 இல் தனது 35 வருட வங்கிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார், அவர் பல்லாண்டு காலம் மேலும் சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மக்கள் வங்கி, காங்கேசன்துறைக்கிளை.

(0999)

---


# - போஸ்கோ -

பாடசாலை உபகரணங்கள், அலுவலக பாவனைப் பொருள்கள், காகிதாதிகள் விற்பனையாளர்.

**கிளிநொச்சியில்**
யாழ். வீதி,
(நீதிமன்று முன்பாக),
கிளிநொச்சி.

**சாவகச்சேரியில்**
யாழ். வீதி,
(பழைய பெற்றோல் செட்),
சாவகச்சேரி.

(சி-4099)


---

# மரண அறிவித்தல்கள்

## செல்வநாயகம் விஜயலட்சுமி

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த செ. விஜயலட்சுமி 10-3-96 இல் எழுதுமட்டுவாளில் சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், க. சிவராசா, க. இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பகீரதன், குமரேசன் தேவராசா, அசோகன் (யாழ்.மாநகரசபை), சுகந்தன், சிவகணேசன், சிவஸ்கந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11-03-96) காலை 10 மணிக்கு எழுதுமட்டுவாள் மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவராசா
(சகோதரன்)
கிராம அலுவலர், திருநெல்வேலி J/110

'குமரன் இல்லம்',
நாகர் கோவில் றோட்,
எழுதுமட்டுவாள்,

(40936)

## நவரத்தினம் சுசீலா

கோண்டாவில் மேற்கு, செல்வராசா வீதியைச் சேர்ந்தவரும், குணபாலன் வீதி, கரவெட்டி வடக்கில் தற்பொழுது வசித்தவருமான செல்வி நவரத்தினம் சுசீலா 08-03-1996 வெள்ளிக்கிழமை காலை அகால மரணமானார்.

இவர் நவரத்தினம் - மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், சிவகுமார் (சுவிஸ்), விஜயகுமார் (இத்தாலி), சோபனா (இத்தாலி), சாந்தகுமார், உதயகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சச்சிதானந்தம் (இத்தாலி), கோமனா (இத்தாலி) ஆகியோரின் மைத்துனியும், சந்தோஸ் (இத்தாலி) இன் சித்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-03-1996 பிற்பகல் 5-00 மணிக்கு கரவெட்டியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. நவரத்தினம்
(தகப்பன்)

(41009)

## கணபதி கிட்ணர்

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியை வதிவிடமாகவும் கொண்ட கணபதி கிட்ணர் நேற்று (10-03-96) காலமாகிவிட்டார். இவர் லச்சுமியின் அன்புக் கணவரும், இராசதுரை சிவஞானம் (க. பொ. கூட்டுத்தாபனம்), பரஞ்சோதி (இத்தாலி), தர்மரெட்ணம் (ரிங்கர் தனுஜ), காலஞ்சென்ற தேவராசா, வசந்தி, சாந்தி, வரதன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (11-3-96) திங்கள் மாலை 3-00 மணியளவில் தற்போதைய வதிவிடமாகிய இத்தாவிலில் இருந்து வேம்பொடுகேணி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
தர்மரெட்ணம் (குஞ்சிலி)

இத்தாவில்,
வேம்பொடுகேணி (பாடசாலை).

(41010)

---

## புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்

# அறிவித்தல்

யாழ். மாவட்ட இடம்பெயர்ந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளை கருத்திற்கொண்டு வன்னிப் பெரு நிலப்பரப்பில் சங்கத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தலைமைக் காரியாலயம்:- சேவிஸ் வீதி, இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி.

உப காரியாலயம்:- முழங்காவில், பூநகரி.

கிளைகள்:-
★ முழங்காவில் ★ கரியாலை நாகபடுவான், ★ கிராஞ்சி,
★ குமுழமுனை, ★ நாச்சிக்குடா, ★ இரணைமடுச் சந்தி.

தலைவர்,
புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்

(சி/4097)

---

புதிதாகக்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படக் கூடிய சிக்கலிலிருந்து தப்புவதற்காக இக் குழுவினர் புதிய காரணங்களை தேடுகின்றனராம்.

தாங்கள் பரிசோதித்த ஹெலிகள் வேறு; இங்கு வந்து சேர்ந்தவை வேறு என்று அக் குழுவினர் இப்போது கூறுகின்றனராம்.

ஸ்ரீலங்கா விமான படைக்கு மேலும் நான்கு ஏ. என். 32 ரக விமானங்கள் கொள்வனவு செய்யப்படவிருப்பதாகவும் —

அவற்றைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக இக் குழுவினரே கசகஸ்தான் நாட்டுக்கு சென்றிருக்கின்றார்கள் என்றும் —

மேலும் கூறப்படுவதாக சிங்கள வார இதழ் தெரிவித்திருக்கின்றது.

(உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நடைமுறையில் இரு நாடுகள்

ஆள் அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது—

நாய்களுக்குக் கழுத்துப் பட்டி கட்டுவதுபோல தமிழர்களுக்குப் பட்டி கட்டுவதற்காகவே அப்போதைய அரசு இந்த நடவடிக்கையை எடுப்பதாக—

ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற வி. நவரத்தினம் கண்டனம் தெரிவித்திருந்தார். அடையாள அட்டை வழங்கும் முறையை வன்மையாக எதிர்த்தார்.

அவரது கூற்று நூற்றுக்கு நூறு உண்மை என்பதனை இப்போது நடைமுறையில் காண்கின்றோம். அடையாள அட்டை இல்லாமல் தமிழர்கள் தென்னிலங்கையில் நடமாட முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

போகுமிடம் எல்லாம் ஆள் அடையாள அட்டையை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற சட்ட ரீதியான கட்டாயம் இல்லை ஆயினும் கொழும்பிலும், தெற்கின் ஏனைய பகுதிகளிலும் அது இல்லாமல் பயணம் செய்யும் தமிழர்கள் கேட்டுக் கேள்வி இன்றிக் கைது செய்யப்படுகிறார்கள்; தடுத்து வைக்கப்படுகிறார்கள்; பொலீஸ் நிலையங்களில் வைத்துச் சித்திரவதை செய்யப்படுகிறார்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாது நீண்ட நாள்களாக தடுத்து வைத்துச் சாகடிக்கப்படுகிறார்கள்.

இதற்கு மேலதிகமாக, வட பகுதியில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகள், வவுனியாவில் வைத்துப் பாதுகாப்புப் படையினர் வழங்கும் அனுமதிச் சீட்டையும் — பாஸையும்— எடுத்துச் செல்ல வேண்டியகட்டாயம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அதாவது வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் தமிழர்களை வேற்று நாட்டவர்களாகக் கருதி வழங்கப்படும் ''வீஸா''வை அவர்கள் போகும் இடமெல்லாம் எடுத்துச் செல்ல வேண்டும் இல்லையேல் அவர்கள் கொழும்பில் குழப்பம் விளைவிக்க வந்த சந்தேக நபர்களாகக் கருதப்பட்டுக் கைது செய்யப்படுவார்கள்; தடுப்பு முகாம்களில் அடைக்கப்படுவார்கள்; சித்திரவதை செய்யப்படுவார்கள்.

தமிழர்கள் என்றால் நோயாளிகளாக இருப்பினும் சரி தான், வயதானவர்களாக இருப்பினும் சரி தான் அவர்கள் சிங்களவர்களுக்கு எதிரிகள், சிங்கள தேசத்தின் பகைவர்கள் என்ற ''கோட்பாட்டை'' அடிப்படையாகக் கொண்டே, படையினர் இவ்வாறெல்லாம் தமிழர்கள் மீது புதிய புதிய கட்டுப்பாடுகள், தடைகளைக் கொண்டு வருகிறார்கள்.

வடக்கில் கொழும்பு அரசின் ஆணை செல்லுபடியாகவில்லை என்றும் அதனால் நாடு இரண்டுபட்டுவிட்டதாகவும் எதிர்க்கட்சியில் இருந்தபோது கூறிய ஸ்ரீ. ல. சு. கட்சி அரசியல்வாதிகள்—

இப்போது வவுனியாவில் வைத்து வடபகுதி மக்களுக்கு ''வீஸா'' வழங்குவதற்குப் படையினரை அனுமதித்து— நடைமுறையில் நாட்டைத் தாமே இரண்டாகப் பிரித்து விட்டார்கள். இப்போது கூட வடக்கில் அரசினால் ஆணை செலுத்த முடியவில்லையே.

இதற்குப் பிறகும், தீர்வுத் திட்டம் நாட்டை பிளவுறச் செய்யப் போவதாகக் கூக்குரல் எழுப்பும் பேரினவாதிகள், கண் இருந்தும் குருடர்களே!

# மருத்துவத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை நடத்த 'லைசென்ஸ்'

## தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவு வழங்கும்

சாவகச்சேரி, மார்ச் 11

யாழ். குடாநாட்டில் மருத்துவத்துடன் தொடர்புடைய நிலையங்கள், நிறுவனங்கள் எதனையும் உரிமங்கள் (லைசென்ஸ்) இல்லாமல் ஏப்ரல் 5 ஆம் திகதிக்குப் பின்னர் தனியார் நடத்த முடியாது.

— இது பற்றிய அறிவித்தலை விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவின் தமிழீழ சுகாதார சேவைகள் பகுதி விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். குடாநாட்டில் மருத்துவத்துடன் தொடர்புடைய பின்வரும் நிலையங்களை இவ்வாண்டு நடத்துவதற்கு உரிமம் கோரும் விண்ணப்பங்கள் தமிழீழ சுகாதார சேவை பணியகங்களில் நாளை 12-03-96 முதல் 05-04-96 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

★ சுதேச, ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள்,

★ சுதேச, ஆங்கில ஹோமியோபதி, அக்குபங்சர் சிகிச்சை நிலையங்கள்,

★ சுதேச, ஆங்கில மருத்துவ மனைகள், ஆலோசனை நிலையங்கள்,

★ மருந்து உற்பத்தி நிலையங்கள்.

மேற்குறித்த நிலையங்கள் எதனையும் உரிமங்களின்றித் தனியார் நிறுவன உரிமையாளர்கள் எவரும் 05-04-96 இற்குப் பின்னர் நடத்துதல் ஆகாது.

உரிமத்துக்கான விண்ணப்பப் படிவங்களை சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை முன்பாக (வினாசித்தம்பி வீதி) அல்லது பருத்தித்துறை மந்திகையிலுள்ள தமிழீழ சுகாதார சேவைகள் பணிமனைகளில் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் அலுவலக நேரத்தில் ஐந்து ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை உரிய உரிமக் கட்டணத்தைக் செலுத்தி மேற்குறித்த அலுவலகங்களில் ஒப்படைக்கலாம்.

அத்துடன் குடும்பப் பதிவு அட்டை. பதிவுச்சான்றிதழ் பட்டமளிப்புச் சான்றிதழின் மூலப்பிரதி ஆகியவற்றை ஆய்வாளரின் ஆய்வுக்காகக் கொண்டுவர வேண்டும். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## 'ஹபரண' வந்தது

அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான நிவாரணப்பொருள்களுடனும், மாவுடனும் நேற்று பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்த 'ஹபரண'' கப்பலில் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் சிலரும் வந்து சேர்ந்தனர்.

நேற்றே பொருள்களை இறக்கும் பணியினை ஆரம்பித்த இக் கப்பல் இன்று திருகோணமலைக்கு செல்லும் என தெரிவிக்கப்பட்டது.

(உ-15-173)

## தெரிவுக் குழு கூடும் திகதிகள்

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு நாளை மறுதினம் 2ஆவது அமர்வுக்காக கூடவிருக்கிறது. மீண்டும் 19ஆம், 25ஆம் திகதிகளில் தெரிவுக்குழு கூடும். (உ-3)

## உகணையில் 2 படையினர் காயம்

அம்பாறை உகணை சின்ன வத்தைப் பகுதியில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் இரு விசேட அதிரடிப்படையினர் படுகாயமடைந்தாகத் தெரிய வருகிறது. (உ-3)

# நாட்டின் ஐக்கியத்துக்கு தீர்வுத் திட்டம் சாவுமணி!

## சிங்கள தீவிரவாத எம். பி. உரை

கொழும்பு, மார்ச் 11

அரசாங்கத்தின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் நாட்டின் ஐக்கியத்துக்கு அடிக்கப்படும் சாவுமணி ஆகும்.

—இவ்வாறு அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் பேசுகையில் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி எம். பியான நிகால் கலபதி தெரிவித்தார்.

அரசின் தீர்வுத் திட்டம் பற்றிய எமது கருத்தை மக்களுக்குத் தெரிவிப்பது எங்கள் கடமையென நாம் கருதுகிறோம். ஆனால் எம்மைத் துன்புறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சதி முயற்சிகள் நடப்பதாக பொய்யான தகவல்களைப் பரப்பி, அவற்றின் அடிப்படையில் எங்களுக்குத் தொல்லை தர வேண்டாம் என்று அரசாங்கத்தில் உள்ளவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களைத் தனியாக விட்டுவிடுங்கள்.

தனது தீர்வுத் திட்டத்தை பௌத்த பிக்குகள் ஆதரிப்பதாக அரசாங்கம் மக்களுக்குப் பிரசாரம் செய்து வந்தது

ஆனால் செவ்வாய்க்கிழமை [5ஆம் திகதி] கொழும்பில் பௌத்த பிக்குகள் சேர்ந்து நடத்திய கூட்டம் அரசாங்கம் பொய் கூறிவந்தது என்பதனை நிரூபித்துவிட்டது— என்றும் நிகால் கலபதி தமது பேச்சில் தெரிவித்தார். [அ]

# லலித் கொலை தொடர்பாக சொத்தி உபாலி கைது!

லலித் அத்துலத் முதலி படுகொலை குறித்து விசாரணை செய்து வரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிப்புரையைத் தொடர்ந்து இரகசியப்பொலீஸார் கடந்த புதனன்று இரவு பிடலி உபாலி அல்லது சொத்தி உபாலி என்றுஅழைக்கப்படும் அரம்ப வெலகே ரஞ்சித்டொன் உபாலியைக் கைது செய்தனர் என்று அரசுத் தரப்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

ஆனால் தான் கைது செய்யப்படவிருப்பதாகத் தகவல் அறிந்து தமது சட்டத்தரணியுடன் சென்று பொலீஸ் அத்தியட்சகர் விக்கிரமசிங்கவிடம் சொத்தி உபாலி சரணடைந்தார் என்று ''ராவய'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

1992ஆம்ஆண்டு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக, தமது புதிய கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு உறுப்பினர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகளில் லலித் அத்துலத் முதலியும், காமினி திஸநாயக்காவும் ஈடுபட்டிருந்தபோது அவர்கள் இருவருக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டது என்றும் —

பஜிரோ ஜீப்புகளில் வந்து இறங்கி அத்துலத்முதலியின் கமராவைப் பறித்து சேதப்படுத்தி, கற்களை வீசித் தாக்கி அங்கிருந்தவர்களை விரட்டிய ஆயுதம் தாங்கிய குழுவுக்கு சொத்தி உபாலியே தலைமை வகித்தார் என்றும் —

ஆணைக்குழு முன் தெரிவிக்கப்பட்ட சாட்சியங்களை அடுத்தே சொத்தி உபாலி கைது செய்யப்பட்டிருக்கின்றார். (உ-3-10)

## யாழ். செயலகத்திலிருந்து

# பிரதேச செயலகங்களுக்கு 37 ஊழியர் இடமாற்றம்

சாவகச்சேரி, மார்ச் 11

யாழ். செயலகத்தில் பணியாற்றிவரும்— மாகாணசபை சேவையில் உள்ளவர்களில்— 37 பேர் பிரதேச செயலகங்களுக்கு யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதனால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட செயலகங்களில் மத்திய அரசின் சேவையில் உள்ளவர்களை மட்டும் பணியில் அமர்த்தும் அரசின் திட்டத்தின் கீழ் யாழ். செயலகத்தில் பணியாற்றிய — மாகாணசபை சேவையின் கீழ் உள்ள— 37பேர் முதல் தொகுதியாக பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

செயலகங்களுக்கான ஆளணி குறைப்பு, நிதி வெட்டு ஆகியவற்றையடுத்து இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# செஞ். சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் 17இல் வருகை

சாவகச்சேரி, மார்ச் 11

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உயர்மட்டக் குழு ஒன்று எதிர் வரும் 17ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜெராட் பேர்டியன், பிரதி வதிவிடப் பிரதிநிதி மார்கோ வெய்ல் வைத்திய இணைப்பதிகாரி பயஸ் நெய்யர் ஆகியோர் அடங்கிய உயர்மட்டக்குழுவே இங்கு வரவிருக்கிறது.

இரு தினங்கள் இங்கு தங்கியிருக்கும் இக் குழுவினர் இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கும் சில முகாம்களுக்கும் விஜயம் செய்வர்.

வைத்தியசாலைகளுக்கும் இவர்கள் சென்று அக்குள்ள குறைபாடுகளையும் கேட்டறிவர். (உ-3)

## செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின்

# நடமாடும் வைத்திய சேவை ஸ்தம்பிக்கும் அபாய நிலை

சாவகச்சேரி, மார்ச் 11

யாழ். மாவட்டத்துக்கு மருந்துப்பொருள்களை எடுத்துச்செல்ல செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்காததையடுத்து—

வடமராட்சி, தென்மராட்சியில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நடமாடும் வைத்திய சேவைகளில் ஒன்று நிறுத்தப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அமைப்புக்கள் மருந்துப் பொருள்களை எடுத்து வர பாதுகாப்பு அமைச்சு விதித்துள்ள தடை காரணமாக, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் மருந்துப் பொருள்களை எடுத்து வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக —

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் மேற் கொள்ளப்பட்டு வந்த இரண்டு நடமாடும் வைத்திய சேவைகளையும் நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

தற்சமயம் கையிருப்பில் உள்ள மருந்தைக் கொண்டு ஒரு சேவையை மட்டும் நடத்துவது என்றும் —

மற்றைய சேவையை நிறுத்துவதெனவும் —

செஞ்சிலுவை சர்வதேசக் குழு முடிவு செய்துள்ளது.

தற்போதுள்ள மருந்து கையிருப்பும் ஒரு மாதத்துக்கு மட்டுமே போதுமானது என்றும் —

அதன் பின்னர் சகல வைத்திய சேவைகளையும் நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு [illegible] வதெரிவித்தார்.

(இ-3)

# புற்று நோயாளருக்கு உதவ 'கேன்' அமைப்பு ஸ்தாபிதம்

சாவகச்சேரி, மார்ச் 11

புற்றுநோயால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவி வழங்கும் நோக்குடன் ''வடக்கு-கிழக்கு புற்றுநோய் உதவி நிறுவனம்'' —''கேன்''— (CANE) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்கவும் —

கொழும்பு செல்லாது இங்கு தங்கியிருக்கும் புற்றுநோயாளருக்கு போசாக்குள்ள உணவு வகைகள் மற்றும் மருந்து வகைகளை வழங்கவும்—

இந்தப் புதிய அமைப்பு நடவடிக்கை எடுக்கும் என நிறுவனத்தின் உப தலைவர் பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

மந்திகை ஆஸ்பத்திரியில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இந்த அமைப்பின் தலைவராக போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி ந. கனகரத்தினம் இருப்பார். செயலாளராக டாக்டர் சிறீஸ்கந்தராசா செயற்படுவார்.

சமூகத்திலிருந்து நிதியைத் திரட்டி புற்றுநோயாளருக்கு இந்த அமைப்பு உதவி வழங்கும்.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று முதல்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) வுள்ளன.

எனினும் இடம் பெயர்ந்த மாணவர்கள் தாம் தற்போது தங்கியுள்ள இடத்துக்கு அருகில் உள்ள பாடசாலையில் கல்வி பயில வசதி செய்யப்பட்டுள்ளது.

காலை 8-30 முதல் நண்பகல் 12-30 வரை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் — நண்பகல் 12-30 முதல் மாலை 4-30 வரை ஆண்டு 5க்கு உட்பட்ட வகுப்பு மாணவருக்கும் வகுப்புகள் நடைபெறும்.

வன்னி பெருநிலப்பரப்பில் கடந்த முதலாம் திகதி முதல் பாடசாலைகள் இயங்கி வருவது தெரிந்ததே. (உ-ரி)

# மரண அறிவித்தல்கள்

## பாவிலுப்பிள்ளை சந்தியாப்பிள்ளை

மாதகலைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பாவிலுப்பிள்ளை சந்தியாப்பிள்ளை நேற்று (10-03-1996) காலமாகிவிட்டார்.

இவர் மரியம்மாவின் அன்புக் கணவரும், ஜெகநாதன் (ஜேர்மனி), ஜெபநேசன் (கனடா), ஜெயசீலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பானந்தறதி (ஜேர்மனி), கெசில்டா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜென்சியா (ஜேர்மனி), ஜெல்சன் (ஜேர்மனி), ஜெனோபி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (12-03-1996) செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணியளவில் கோரியடி சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. மரியம்மா
(மனைவி)

''றோஸ்கொட்''
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

(40345)

## Dr. தம்பையா சிவராஜசிங்கம்
(துரை)

சாவகச்சேரி நுணாவில் கிழக்கை பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது லண்டனை வசிப்பிடமாக கொண்டவருமான Dr. தம்பையா சிவராஜசிங்கம் 03-03-1996 இல் லண்டனில் காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பையா தங்கம்மாவின் அன்பு மகனும், தவலோஜினியின் அன்புக்கணவரும், Dr. வாசுகி, Dr. வசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு பரராஜசிங்கம் (நீதிமன்றம்), திரு ஜெயராஜசிங்கம் (இலங்கை போக்குவரத்து சபை, வவுனியா), திருமதி திலகவதி இராஜசுந்தரம், காலஞ்சென்ற திருலோகநாதன், காலஞ்சென்ற சந்திரசேகரம், திருமதி தனலக்சுமி நடராஜா, திருமதி மணிமேகலை ஜெயபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
பரமேஸ்வரி சந்திரசேகரம்

50, கண்டி வீதி,
சாவகச்சேரி.

(40937)

## ஏரோனி பிரான்சிஸ்
(பாசையூர்)

ஏரோனி பிரான்சிஸ் (ஓய்வு பெற்ற அரச நில அளவையாளர், உளவள துணையாளர் - சாந்திகம்) கொழும்பில் 07-03-96 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இறப்பியேல் ஏரோனி, மதலேனா ஆகியோரின் அன்பு மகனும், திருமதிபிளசம் பிரான்சிஸ் அவர்களின் அன்புக் கணவரும், திருமதி வினித்தா இராஜேந்திரகுமார் (U. K), செல்வி அனித்தா ஷாவின் (டிம்பின, யாழ். தொழில் நுட்பக்கல்லூரி - N. D. E. II), செல்வி கௌனித்தா சுஜாலின் (O/L மாணவி, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு இராஜேந்திரகுமாரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவரான ஏரோனி பிலிப், திருமதி. ஹில்டா கெலன் பொனாண்டோ, திரு. ஏரோனி வின்சன்டிபோல் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவரான சவரிமுத்து இராயப்பு. அக்னெஸ் ஆகியோரின் அன்பு மருமகனும், வைத்திய கலாநிதி இ.பெரிசல்தேரிஸ் (U.K), திருமதி எட்னர் அந்தோனிப்பிள்ளை (U.K), காலஞ்சென்ற பார்பரா பிலிப், திரு. ச. எ. பெர்னாண்டோ, திருமதி. லெனிற் வின்சன்டி போல் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் மரணச் சடங்கு கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
S E. பெர்னாண்டோ
செம்பியன் பற்று

(40935)

**2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 11-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## தமிழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கண்டியில் மல்வத்தை பீடாதிபதி தலைமையினான பிக்குகளைச் சந்தித்த போதே அவர்கள் இவ்வாறு கேட்டனராம்.

அரசு சமர்ப்பித்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு ஆதரவு தரக் கோரியே மேற்படி பிக்குகளை தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் சந்தித்தனர்

(உ-3)

## பிரான்ஸ்..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) குப் பின்னரே இந்நிறுவனத்தால் கடற்படைக்கு வழங்கப்பட்டது.

தமது முன்னணி ஆட்சிக்கு வந்தால் ஆயுதக் கொள்வனவில் தரகர்கள் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் என பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு தேர்தல் வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும் அந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் ஆயுதக் கொள்வனவுக்காக மேற்படி தம்பதியினரின் நிறுவனம் தரகர்களாகச் செயற்படக் கூடியதாக அந்நிறுவனத்துக்கு பல ஒப்பந்தங்களை வழங்கியிருக்கின்றது.

அதிவேகத் தாக்குதல் படகுகள் சிலவற்றைக் கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தமும்—

மூன்றாவது ஈழப் போர் ஆரம்பித்த நேரத்தில் இஸ்ரேலிடமிருந்து இரு அதிவேக தாக்குதல் படகுகளை விநியோகிப்பதற்கான ஒப்பந்தமும்—

அமெரிக்காவில் உள்ள ''ரினிட் மரைன்'' என்ற நிறுவனத்திடம் இருந்து பல யுத்தக் கப்பல்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தமும்—

கேள்விப்பத்திர முறைகள் அனுசரிக்கப்படாமலேயே இந்தத் தம்பதிகளின் நிறுவனத்துக்கே வழங்கப்பட்டதாம்.

இது தவிர—

ஜனாதிபதி தங்கியிருக்கும் அலரிமாளிகை, திருகோணமலையில் உள்ள கடற்படை அதிகாரிகளின் வாசஸ்தலங்கள் ஆகியவற்றில் உள்ளக அலங்கார பணிகளுக்கான— 75 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான— அலங்கார ஒப்பந்தமும் இந்தத் தம்பதியினரின் நிறுவனத்துக்கே வழங்கப்பட்டிருக்கின்றதாம்.

(உ-10)

## எண்ணெய்க்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) மாதங்களில் மட்டும் 270 கோடி ரூபா காலதாமதக் கட்டணமாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் செலுத்தப்பட்டது என்று 'யுக்திய' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது.

எண்ணெயுடன் காத்து நிற்கும் கப்பல்களுக்கு சர்வதேச கப்பல் போக்குவரத்துச் சட்டங்களுக்கு அமைய தாமதக் கட்டணம் செலுத்த வேண்டி உள்ளது என்றும்—

இவ்வாண்டு இறுதி வரை எண்ணெய் களஞ்சிய வசதிகள் கிடைக்கமாட்டா என்றும்—

இதே நிலை நீடிக்கும் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது! (உ-10)

## இந்தோனேஷியா..

1 ஆம் பக்கத் தொடர்ச்சி] மேற்கொள்வதாகவும் ''யுக்திய'' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

இந்த விமானம் சிறிய உதிரிப் பாகங்களாக கொழும்பில் அல்லது அதனை அண்டிய பகுதிகளில் நிலத்திற்கு அடியில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்புத் துறையினர் இப்போது [illegible] அப்பத்திரிகை தெரிவித்தது.

(உ-10)

## சமாதான..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. யுமான டிரோன் பெர்னாண்டோ.

கொழும்பிலிருந்து வெளிவரும் ''வீக்கென்ட் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

விடுதலைப் புலிகளைப் புறக்கணித்து சமாதான முயற்சிகள் நடைபெற்று வருவதைக் குறிப்பிட்டுக் கேட்ட போதே டிரோன் முன்கண்டவாறு பதிலளித்தார்.

நாட்டில் சமாதானம் உருவாக வேண்டும் என்பதே எமது விருப்பம். தீர்வுத்திட்டம் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும் என்றும் நாம் விரும்புகிறோம்.

தமிழர்களுக்கு அதிகாரப் பரவல் வழங்கப்பட்டால், அதற்குப் பதிலாக தமக்கு என்ன கிடைக்கப் போகிறது என்று சிங்கள மக்கள் அறிய விரும்புவார்கள்.

அதிகாரப் பரவல் சமாதானத்தை நாடியதாக இருக்க வேண்டும். நாட்டில் அமைதி உருவானால் மட்டுமே திருப்திகரமான அரசியல் தீர்வைக் கொண்டு வரலாம்—

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே அதிகாரப் பரவலை எதிர்த்து இன விவகாரத்தை சிக்கல் நிறைந்த ஒன்றாக மாற்றியது — என்றும் அவர் கூறினார்.

சிங்களம் மட்டும் சட்டத்தை பண்டாரநாயக்கா கொண்டு வந்ததாலேயே பிரச்சினை ஆரம்பமானது என்று தெரிவித்த டிரோன் 1955 ஆம் ஆண்டில் தமது தந்தையாரான ஷெல்டன் பெர்னாண்டோ யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்தார் என்பதனை நினைவுபடுத்தினார்.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழர்கள் எல்லாத் தொடர்புகளையும் அறுத்து விட்டார்கள் எனவும் அவர் சொன்னார். (அ)

## மூளாயில் மோதல்

சாவகச்சேரி, மார்ச் 11

மூளாயில் கடந்த வெள்ளிக்கிழமை ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. (உ-3)

## சமுகம் தரவும்

தமிழீழ நிர்வாக சேவையில் பதியப்பட்ட, பதியப்படாத சகல ஒப்பந்தக்காரர்களையும் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன் தமிழீழ நிர்வாக சேவை அலுவலகத்திற்கு சமுகம் கொடுக்குமாறு கோரப்பட்டுள்ளது (இ)

## புலிகள் பேச்சுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) வெடிப்பால் நாட்டின் பொருளாதாரம் எவ்வகையிலும் பாதிக்கப்பட வில்லை.

★ பாதுகாப்புச்செலவினம் 7.2 வீதமாக இருக்கும் என வரவு — செலவுத்திட்டத்தில் அரசு எதிர்பார்த்திருந்தது. ஆனால் அந்தச் செலவினம் ஐம்பது வீதம் அதிகரித்திருப்பது உண்மையே.

★ அதிகாரப் பரவலாக்கல் யோசனை குறித்து புலிகள் பேச்சு நடத்த முன்வராமல் அரசுக்குஎதிராக தொடர்ந்து இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவார்களேயானால் அரசாங்கமும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும்.

அதிகாரப் பரவலாக்கலுக்கு புலிகள் இணங்க மறுத்தால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் மற்றுமொரு மார்க்கம் புலிகளுக்கு எதிரான யுத்தமே.

★ தமிழ் மக்கள் இதுவரை கடைப்பிடித்து வந்த மௌனத்தை கைவிடுவதற்கு இது ஓர் அரியசந்தர்ப்பம்; திட்டவட்டமான நிலைப்பாட்டை அவர்கள் மேற்கொள்ள வேண்டிய தருணம் வந்து விட்டது — என்றார். (உ-3)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை சிவபாதசுந்தரம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரணவாய் மத்தியை தற்காலிக இருப்பிடமாகவும் கொண்டிருந்த செல்லத்துரை சிவபாதசுந்தரம் [யாழ். மாநகர சபையின் ஓய்வுபெற்ற நிறுத்தல் அளவை பரிசோதகர்] நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், பேராசிரியர் மகேஸ்வரன் [யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி], திருமதி சிவநேசரட்ணம் குணரட்ணம் [ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி], ஞானேஸ்வரன் [பொறியியலாளர், நியூசிலாந்து], திருமதி சிவநேசராணி பத்மநேசன் [ஆசிரியை, யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்], இராஜேஸ்வரன் [உதவிப் பொறியியலாளர், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), திருமதி சிவநேசமலர் ஜெயபாலன் (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), திருமதி சிவநேசஜோதி சிவானந்தராஜா (பொறியியலாளர், புறாணை) ஆகியோரின் அன்புத்தந்தையும்,

பேராசிரியர் (திருமதி) இராஜேஸ்வரி மகேஸ்வரன் (யாழ். பல்கலைக்கழக இரசாயனப் பிரிவு), சி. குணரட்ணம் (உதவிப் பணிப்பாளர், விளையாட்டமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணசபை), திருமதி ருக்மணி ஞானேஸ்வரன், க. பத்மநேசன் (முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ். மாவட்ட காரியாலயம்), திருமதி சிவாஜினி இராஜேஸ்வரன், தெ. ஜெயபாலன் (ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி), தி சிவானந்தராஜா (பொறியியலாளர், புறாணை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பார்த்திபன், பிரதீபன், சுகந்தீபன், தர்ஷிகா, கோகுலன், சியாமளன், மதுரன், கௌசல்யா, முகுந்தன், திலீபன். அரிச்சுனன், நிரோஜா, சுஜீவன், வதனி, பானு ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. பத்மநேசன் (மருமகன)

தற்காலிக முகவரி:-
மே/பா. செ. செல்வராசா,
பாடசாலை வீதி,
(பொன்னம்பலம் ம. வி. அருகில்)
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(41011)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org